கிருபையுள்ள வார்த்தை
KIRUBAIYULLA VAARTHAI
லூக்கா (LUKE) 4:22

Vol - 17 | December டிசம்பர் | 2016
ஆண்டு சந்தா ரூ. 120/- | தனிப் பிரதி ரூ. 10/- | வெளிநாட்டு சந்தா ரூ. 600/-



# ஸ்தோத்திர பலியிடுகிறவன் என்னை (கர்த்தர்) மகிமைப்படுத்துகிறான் ...

சங்கீதம் 50:23

கௌரவ ஆசிரியர் BETTY CHOATE
ஆசிரியர் பிலேமோன் ராஜா

புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்கும் இதழ்

## இதழின் உள்ளே...


| | |
|---|---|
| நன்றியை செயலாக்குங்கள் ! | 3 |
| கர்த்தருடைய பந்தி | 6 |
| ஏன் தேவனுக்கு நன்றி ... | 9 |
| ளிப்படுத்தின விசேஷத்திலிருந்து... | 11 |
| சிறுவர் பகுதி | 15 |



*In memory of J.C. CHOATE*

*Guest Editors :* **Betty Choate, Jerry & Paula Bates**

*Editor :* **PHILEMON RAJAH**

ஆசிரியர் குழு

**V. கிங்ஸ்லிராஜா,** M.S. (I.T.& M.)., M.Th.,

**Dr. V.S. இம்மானுவேல்,** M.Sc., D.D.,

**C. கியாமிலஸ் கார்த்திக்,** B.Sc.,

**R. ஆண்டனி ராஜா,** D.Th.,


## கிருபையுள்ள வார்த்தை TV நிகழ்ச்சிகள்

### நம்பிக்கை T.V. யில்

வெள்ளி காலை

**6 மணி முதல் 6-30 மணி**

செய்தியாளர்

போதகர். **பிலேமோன்ராஜா,** M.A., M.Th.,

(Director - J.C. School of Evangelism)

### தமிழன் T.V. யில்

ஞாயிறு காலை 6-45 மணி

செய்தியாளர்

சகோ. **கிங்ஸ்லி ராஜா,** M.Th.,

(இணை ஆசிரியர் – கிருபையுள்ள வார்த்தை)

கிருபையுள்ள வார்த்தை நிகழ்ச்சியினை காணத்தவறாதீர்.










**Advanced Bible Correspondence Courses Available in English.**

For Details:

**CHOATE BIBLE CORRESPONDENCE COURSE INSTITUTE**

P.O.Box 15, Arasaradi,
Madurai - 625 016. Tamilnadu

**கிருபையுள்ள வார்த்தை**

நன்றிபலி செலுத்த உற்சாகபடுத்தும் உன்னதரின் வார்த்தை

**World Literature Publication**

Post Box No. 15, Arasaradi, Madurai 625 016. India




**Send Postal Expenses only and receive The Voice of Truth Intl. Vol.90**

ஆசிரியர் உரை

# நன்றியை செயலாக்குங்கள் !

P.C. பிலேமோன் ராஜா



அன்பான வாசர்களே ! இம்மட்டும் நம்மை கரம் பிடித்து வழிநடத்தி வருகிற சர்வவல்ல தேவனுக்கு கோடா கோடி ஸ்தோத்திரங்களை செலுத்தி, உங்கள் அனைவருக்கும் ஆண்டவர் இயேசுவின் நாமத்தினாலே வாழ்த்துக்களை கூறி, இவ்விதழ் வழியாக சந்திப்பதிலே மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

பரலோக பிதா, நம் ஒவ்வொருடைய வாழ்விலே எண்ணமுடியாத நன்மைகளை செய்தார், செய்கிறார் மற்றும் செய்துகொண்டே இருக்கிறார். இந்த அனுபவத்தை நம்மைப் போல பெற்றுக்கொண்ட சங்கீதக்காரன் ''கர்த்தர் எனக்குச் செய்த எல்லா உபகாரங்களுக்காகவும், அவருக்கு என்னத்தைச் செலுத்துவேன்" **(சங் 116 : 12)** என்று, ஒரு ஆழமான, அர்த்தம் நிறைந்த கேள்வியை கேட்பதை நாம் காணமுடியும்.

இக்கேள்விக்கான நமது பதில், தேவன் செய்தவைக்களுக்கு ஈடாக நாம் ஒன்றையும் செய்ய முடியாது என்பதாக இருக்கும்; அது உண்மைதான்! ஆயினும், நாம் ஒன்றும் செய்யாமல் இருந்துவிடக்கூடாது.

பத்து குஷ்டரோகிகளை ஆண்டவர், அற்புதமாக சுகமாக்கினார்; அதற்கு ஈடாக நிச்சயம் அவர்களால் ஒன்றும் செய்யமுடியாது என்பது உண்மைதான்! ஆயினும் தேவன் மகிமைப்படும்படியாக செயல்பட்ட, அந்த ஒரு குஷ்டரோகியை பார்த்து, ஆண்டவர் : "மற்ற ஒன்பது பேர் எங்கே" ? எனக் கேட்கிறார். இதன் பொருள், "ஏதாவது செய்ய வேண்டும் என்பதே!" அப்படி நன்றியை தங்கள் வாழ்வில் செயல் வடிவப்படுத்திட்ட, பரிசுத்தவான்கள் என்னென்ன செய்தனர் என்பதை ஆராய்வோம்.




## 1. துதித்தனர்

இஸ்ரவேலர்களை எகிப்திய அடிமைதனத்திலிருந்து பரலோக தேவன் அற்புதமாக விடுதலை செய்த பின்பு **(யாத் 12)** இஸ்ரவேலர்கள் நன்றி பெருக்கினால் தேவனை துதித்தனர் **(யாத் 15):** பிள்ளையற்ற தங்களுக்கு கர்த்தர் பிள்ளைபேரை தந்தவுடன், சகரியா தேவனை துதித்து புகழ்ந்தார் **(லூக்கா 1 : 67–79):** பாவத்தின் அடிமை தனத்திலிருந்து, ஞானஸ்நானம் பெற்று விடுதலை பெற்ற பரிசுத்தவான்கள் தேவனை துதித்தனர் **(அப் 2:42–47).**

**எபி 13 : 15ல்** "ஆகையால், அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலியை அவர்மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக்கடவோம்." என்றும், மற்றும் **சங் 34 : 1ல்** "கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்தரிப்பேன்; அவர் துதி எப்போதும் என் வாயிலிருக்கும்." என்றும் வாசிக்கிறோம். தேவன் செய்த நன்மைகளைநினைத்துப் பார்க்கின்ற ஒருவரால் நிச்சயம் அவரை துதிக்காமல் இருக்க முடியாது. அந்த நன்றியுணர்வு, பொங்கி, பின்பு துதியின் சப்தமாக வெளிவரும். நீங்கள் தினமும் தேவனை துதிக்கின்றீர்களா ? தேவனை துதிக்க நீங்கள் எவ்வளவு நேரம் செலவிடுகிறீர்கள் ? இந்தக் கேள்விக்கான பதில், நாம் தேவனிடத்தில் எந்த அளவு நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம் என்பதை நமக்கு உணர்த்தும்.

## 2. தொழுதுக் கொண்டனர்

பாவத்தின் விளைவினால், முழு உலகமும் ஜலப்பிரளயத்தினால் நிர்மூலமாக அழிக்கப்பட்ட போது, நோவாவும் அவன் வீட்டாரும், தேவனுடைய மிகப்பெரிய கிருபையினால் காப்பாற்றப்பட்டார்கள் **(ஆதி 6–8).** பேழையிலிருந்து வெளியே வந்த நோவாவும் அவன் வீட்டாரும், செய்த முதல் வேலை

தேவனை தொழுதுக் கொண்டதுதான். **ஆதி : 18,20** "அப்பொழுது நோவாவும், அவன் குமாரரும், அவன் மனைவியும், அவன் குமாரரின் மனைவிகளும் புறப்பட்டு வந்தார்கள். பூமியின்மேல் நடமாடுகிற சகல மிருகங்களும், ஊருகிற சகல பிராணிகளும், சகல



பறவைகளும் ஜாதிஜாதியாய்ப் பேழையிலிருந்து புறப்பட்டு வந்தன. அப்பொழுது நோவா கர்த்தருக்கு ஒரு பலிபீடம் கட்டி, சுத்தமான சகல மிருகங்களிலும்,சு த்தமானச கல பறவைகளிலும் சிலவற்றைத் தெரிந்துகொண்டு, அவைகளைப் பலிபீடத்தின்மேல் தகனபலிகளாகப் பலியிட்டான்." சங்கீதக்காரன் கூட **சங் 116 : 12,13** "கர்த்தர் எனக்குச் செய்த எல்லா உபகாரங்களுக்காகவும், அவருக்கு என்னத்தைச் செலுத்துவேன். இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு, கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுவேன்." என்னத்தை செலுத்துவேன் என்று கூறிகிறார். கேள்விக்கு, கர்த்தருடைய நாமத்தை தொழுதுக்கொள்வேன் என பதில் அளிக்கிறார். நீங்கள், இந்த வருடத்தில் சபை கூடி வருதலை எத்தனை முறை தவற விட்டீர்கள்? அதற்காக நீங்கள் நியாயமான காரணங்கள் எத்தனை சொன்னாலும், தொழுகையை தவறவிடுதல் என்பது நன்றியற்ற செயலாகவே உள்ளது. நாம் அப்படி தவறவிடும்போது தேவனிடத்தில் நன்றியற்றவர்களாக இருக்கிறோம் என்பதே கசப்பான உண்மையாகும்.

### 3. பொருத்தனைகளை நிறைவேற்றினர்

யாக்கோபு, உயிருக்கு பயந்து, வெறுங்கையோடே தேவனிடம் பொருத்தனை செய்து, யோர்தனை கடந்து சென்றார் **(ஆதி 28):** தேவன் இரண்டு பெரிய பரிவாரங்களை உடையவனாக யாக்கோபை ஆசீர்வதித்தார் **(ஆதி 3:9,10).** யாக்கோபு, தேவனிடம் செய்த பொருத்தனையை நிறைவேற்றி, தனது நன்றியை, செயல் வடிவப்படுத்தினார் **(ஆதி 35 : 6–10),** அன்னாள், மலடியான தனக்கு, தேவரீர் ஆண் பிள்ளை கொடுத்தால், அந்த பிள்ளையை ஊழியத்திற்கே கொடுக்கிறேன் என பொருத்தனை செய்து ஜெபித்தாள் **(I சாமு 1:10–17).** தேவன் ஆண்பிள்ளை கொடுத்தார்; அந்த பிள்ளையை குழந்தை பருவத்திலேயே, தேவனுடைய ஆசாரிப்பு கூடாரத்திலே ஊழியம் செய்யும்படி ஒப்புக் கொடுத்தாள் **(I சாமு 1:26–28).**

இன்றைய நாட்களில் நம்மில் அநேகர், தேவனிடம் நிறைய பொருத்தனைகளை செய்கிறோம்; அன்னாளைப் போல கூட, பிள்ளைகளை ஊழியத்திற்கு என பொருத்தனை செய்கிறோம். ஆனால் தேவாலயத்திலே கொண்டு வந்து விடுவதில்லை. வீட்டிலேயே பத்திரமாக வைத்துவிட்டு, பெரியவனாகட்டும் என காத்திருந்து, நாளடைவில் அவன் உலகத்தின் கவர்ச்சியினால் இழுக்கப்பட்டு, தேவனை விட்டு தூரமான பின்பு, ஊழியத்திற்கு பொருத்தனை செய்த பிள்ளை வீணாகிவிட்டது என புலம்புகிறோம். உபத்திரவ நேரத்திலே, "இனி இந்த பாவத்தை செய்ய மாட்டேன், அந்த நன்மையை செய்கிறேன்" என தேவனிடம் பொருத்தனை செய்து விட்டு, அதை செய்யாமல் இருக்கிறோமா ? **பிரசங்கி 5 : 4** ''நீ தேவனுக்கு ஒரு பொருத்தனைபண்ணிக்கொண்டால். அதை செலுத்தத் தாமதியாதே அவர் மூடரில் பிரியப்படுகிறதில்லை, நீ நேர்ந்துகொண்டதைச் செய்."

### 4. அறிக்கையிட்டனர் (அல்லது) அறிவித்தனர்

அப்போஸ்தலனாகிய பேதுரு, ஆண்டவர் இயேசுவை மறுதலித்தான், கர்த்தர் அவனை மன்னித்தார் மற்றும் அவனுக்காக ஜெபித்தார் **(லூக்கா 22:31 –34,67, 62 ),** தன் உயிரைக் காப்பாற்ற பயந்து, கிறிஸ்துவை தெரியாது என மறுதலித்த பேதுருதான் பின்னாளில், ஆயிரக்கணக்கான இஸ்ரவேலரின் நடுவே நின்று, ''இயேசுவே கிறிஸ்து என்னும்'', ''நீங்கள் கொலைகாரர்கள்" என்றும் தைரியமாக அறிவித்தான். **அப் 2 :36** "ஆகையினால், நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினாரென்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக்கடவர்கள் என்றான்."



இந்த வார்த்தைகளைக் கேட்ட ஆயிரமாயிரம் ஜனங்கள் இருதயத்தில் குத்தப்பட்டு, வசனத்திற்கு கீழ்படிந்ததை அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில் அறியமுடியும்.

நேபுகாத்நேசர், தனது கனவிற்கு தேவன் பதில் கொடுத்தபிறகும் **( தானி 2 ),** சாத்ராக், மேஷாக், ஆபேத் நேகோவை அற்புதமாக விடுவித்த போதும் **( தானி 3 ),** "கர்த்தரே தெய்வம்" என தன் ராஜ்யம் முழுவதும் பிரகடனப்படுத்தினார்.

எல்லாம் வல்ல தேவன் கொடுத்த பாவமன்னிப்பின் மேன்மையை உணர்ந்து, ஆண்டவர் இயேசுவை அறிவிக்கிற ஒவ்வொருவருமே நன்றியை செயல்படுத்துகிறோம். சொல்லாமல் இருப்பதற்கு காரணம் சொல்பவர்கள், நன்றியறியாதவர்களாக இருக்கிறோம் என்பதே உண்மை.

## 5. பாடுகளையும், நிந்தைகளையும் ஏற்றுக்கொண்டனர்:

அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகம் முழுவதையும் நாம் வாசிக்கும் பொழுது, முதலாம் நூற்றாண்டில் பரிசுத்தவான்களும், அப்போஸ்தலர்களும் கிறிஸ்துவினிமித்தம் வரும் பாடுகளையும், அவமானங்களையும் (நிந்தை) மகிழ்வுடன் ஏற்றுக்கொண்டதை நாம் கவனிக்க முடியும். மேலும் அதை பாக்கியம் என்று கருதினார்கள்.

**அ. அப்போஸ்தலர்கள் – அப் 5:40–42** "அப்பொழுது அவர்கள் அவனுடைய யோசனைக்கு உடன்பட்டு அப்போஸ்தலரை வரவழைத்து, அடித்து, இயேசுவின் நாமத்தைக் குறித்துப் பேசக்கூடாதென்று கட்டளையிட்டு, அவர்களை விடுதலையாக்கினார்கள். அவருடைய நாமத்துக்காகத் தாங்கள் அவமானமடைவதற்குப் பாத்திரராக எண்ணப்பட்டபடியினால், சந்தோஷமாய் ஆலோசனை சங்கத்தைவிட்டுப் புறப்பட்டுப்போய்... இயேசுவே கிறிஸ்து என்று பிரசங்கித்தார்கள்."

**ஆ. ஸ்தேவான் – அப் 7:59,60** "அப்பொழுது கர்த்தராகிய இயேசுவே, என் ஆவியை ஏற்றுக்கொள்ளுமென்று ஸ்தேவான் தொழுதுகொள்ளுகையில், அவனைக் கல்லெறிந்தார்கள். அவனோ முழங்காற்படியிட்டு ஆண்டவரே, இவர்கள் மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும் என்று மிகுந்த சத்தமிட்டுச் சொன்னான். இப்படிச் சொல்லி, நித்திரையடைந்தான் ".



**இ. விசுவாசிகள் – அப் 8:3,4** "சவுல் வீடுகள்தோறும் நுழைந்து புருஷரையும் ஸ்திரீகளையும் இழுத்துக் கொண்டுபோய், காவலில் போடுவித்து , சபையைப் பாழக்கிக்கொண்டிருந்தான் . சிதறிப்போனவர்கள் எங்குந்திரிந்து, சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கித்தார்கள் ".

**ஈ. பவுல் – அப் 14:19,20** "பின்பு அந்தியோகியாவிலும் இக்கோனியாவிலுமிருந்து சில யூதர்கள் வந்து, ஜனங்களுக்குப் போதனைசெய்து, பவுலைக் கல்லெறிந்து, அவன் மரித்துப்போனானென்று எண்ணி, அவனைப் பட்டணத்துக்கு வெளியிலே இழுத்துக்கொண்டு போனார்கள். சீஷர்கள் அவனைச் சூழ்ந்து நிற்கையில், அவன் எழுந்து, பட்டணத்திற்குள் பிரவேசித்தான். மறுநாளில் பர்னபாவுடனேகூடத் தெர்பைக்குப் புறப்பட்டுப்போனான். ".

மேலும் தங்களுக்கு தேவன் தந்த இரட்சிப்பிற்கு நன்றியாக, தங்கள் ஜீவனையும் கிறிஸ்துவிற்காக கொடுக்க எப்பொழுதும் ஆயத்தமாக இருந்தார்கள் (அப் 21:13).

அன்பானவர்களே! அப்போஸ்தலனாகிய பவுல் கொலோசெயருக்கு எழுதும் போது, **கொலே3:1ல்** ''நன்றியறிதலுள்ளவர்களுமாயிருங்கள் '' என ஊக்கப்படுத்துகிறார். ஏனெனில் கடைசி நாட்களில் நன்றியறியாதவர்களாக மாறிவிட கூடிய அபாயம் இருப்பதாக பவுல் தீமோத்தேயுவிற்கு எச்சரிக்கை (II தீமோ 3:1,2) கொடுக்கிறார். தேவன் இஸ்ரவேலர்களை என்னை மறவாதபடி எச்சரிக்கையாயிருங்கள் என எச்சரித்துக்கொண்டே இருந்தார் (உபா 6:12). அந்த எச்சரிப்பின் சத்தம் அவர்களுக்கு பெரிதாக தோன்றவில்லை. நாங்களாவது தேவனை மறக்கிறதாவது? என மெத்தனத்தில் இருந்தனர். விளைவு தேவனை மறந்து, விக்கிரகங்களை வழிபட்டனர். ஏனெனில் தேவனை நினைத்துக்கொண்டே இருக்க என்ன செய்ய வேண்டும் என யோசித்து எதையும் செயல்படுத்தாமல் விட்டு விட்டனர். நம்மை வேதவசனம் நன்றியுள்ளவர்களாக வாழ எச்சரிக்கிறது. ஆகையால் நாம் நன்றியுள்ளவர்களாக தொடர்ந்து ஜீவிக்க, மேலே நாம் படித்த சாட்சிகளாகிய பரிசுத்தவான்கள், நன்றியுடன் வாழ என்ன செய்தார்கள் என்று அறிந்துக்கொண்டதை செய்வோம். நன்றியுள்ளவர்களாக வாழ்வோம்.

# பாடம் : 4 கர்த்தருடைய பந்தி

Jerry Bates



எந்த ஒரு கிறிஸ்தவனுக்கும், கர்த்தருடைய பந்தியாகிய ஐக்கி பந்தி என்றும் அழைக்கப்படுகின்றன இது, தொழுகையில் ஒரு முக்கியமான வசனப்பகுதிகள் **மத்தேயு 26 : 26.29 லூக்கா 22 :14 – 20 : மற்றும் 1 கொரிந்தியர் 11 : 23.34).** கர்த்தருடைய பந்தியுடன் சம்மந்தப்பட்ட அநேக கருத்துகள் சொல்லப்பட்டுள்ளன.

(1) இது ஒரு நன்றி செலுத்துதலுக்குரியது. கர்த்தர் தமது பந்தியை ஸ்தாபிதம் செய்த போது, அவர் ஸ்தோத்திரஞ் செலுத்தினார். கிறிஸ்து தம்மையே நமக்காக பலியானதால் மாபெரும் நன்றியுடன் இதில் பங்கு பெற வேண்டும்.

(2) இது ஒரு நினைவுகூரும் பந்தி. நினைவு கூருதல் எனும் போது, ஏதோ ஒரு கடந்தகால நிகழ்ச்சிக்கு நமது மனதைக் கொண்டு செல்கிறது, இப்படி ஐக்கிய பந்தி நமது மனதை இயேசுவின் சிலுவையை நோக்கிப் பார்க்க செய்கிறது. **1 கொரிந்தியர் 11 : 25ல்,** இயேசுவை நினைவுகூறும்படி இந்தப்பந்தியிலே நாம் பங்கு பெற வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது.

(3) கர்த்தருடைய மரணத்தை நாம் தெரிவிக்கிறவர்களாக இதிலே பங்கு பெறுகிறோம். நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்த பாத்திரத்தில் பானம் பண்ணும் போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள், **" (1 கொரிந்தியர் 11 :26).** இப்படியாக, கர்த்தருடைய பந்தியும் ஒரு வகையில் பிரசங்கிப்பதுதான். நாம் கர்த்தருடைய பந்தியிலே பங்கு பெறுவதை மற்றவர்கள் பார்க்கும் போது, இயேசுவின் மாபெரும் பலியில் நாம் கொண்டுள்ள விசுவாசத்தை நாம் நமது செயலால் அறிவிக்கிறோம்.

(4) நாம் ஒருவருக்கொருவர் அந்நியோந்ய ஐக்கிய முள்ளவர்களாயிருக்கிறோம். **1 கொரிந்தியர் . 10:16,** 17 ஐக் கவனியுங்கள். "நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரங்கள் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா ? அந்த ஒரே அப்பத்திலே நாமெல்லாரும் பங்கு பெறுகிறபடியால், அநேகரானா நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம்,'' என்று சொல்லப்படுகிறது. ஐக்கியம் என்பது அந்நியோஞ்யம் என்று பொருள். இந்த வசனப்பகுதியில், விக்கிரக கோவில்களில் புசிக்கிறவர்கள் பேய்களோடே ஐக்கிய மாயிருக்கிறார்கள். அதே போல, கர்த்தருடைய பந்தியை புசிப்பதனால் இயேசுவோடும் நம்மில் ஒருவரோடொருவரும் ஐக்கியமாயிருக்கிறார்கள் என்று பவுல் சொன்னார். பரஸ்பரம் ஒருவருக்கொருவர் மற்றும் இயேசுவோடு கொண்டிருக்கும் பற்று மூலம் நாம் நமது ஐக்கியத்தை புரிந்து கொண்டு வலியுறுத்துகிறோம்.

## கர்த்தருடைய பந்தியின் பொருட்களும் அவைகளை குறித்த அர்த்தமும்

கர்த்தருடைய பந்தியில் பயன்படுத்தப்படும் பொருட்கள் மிகவும் எளிமையானவை, மனுஷர்கள் பளபளப்பான வண்ண மற்றும் கருங்கல், (Granite), பொன் போன்ற நீடித்து நிலைக்கும் பொருட்களைக் கொண்டு நினைவுச் சின்னங்களை உண்டாக்குவார்கள். ஆனால் தேவன் அழிந்து போகிற தன்மையுடைய அப்பத்தையும் திராட்ச ரசத்தையும் நினைவுச் சின்னமாக நமக்காக ஏற்படுத்தினார். நம்முடைய இருதயங்களே இதற்கு பொருள் (அர்த்தம்) கொடுக்கின்றன. இயேசு புளிப்பில்லாத அப்பத்தைப் பயன்னடுத்தினார் **(லூக்கா 22 :1, 8–9).** யூதர்கள் புளிப்பில்லாத அப்பத்தை தங்கள் பஸ்கா பண்டிகையில் பயன்படுத்தும் படி கட்டளையிடப்பட்டனர், எனவே அந்த பரிச்சயப்பட்ட பொருளையே எடுத்து அதற்கு புதியதொரு அர்த்தத்தைக் கொடுத்தார். இப்பொழுது அது இயேசுவின் மாம்ச சரீரத்தை நினைவு படுத்துகிறது, இந்த சரீரம் நமக்காக சிலுவையில் பலியாக்கப்பட்ட சரீரம். இயேசு திராட்ச ரசத்தையும் எடுத்தார் **(மத்தேயு 26:29),** திராட்ச ரசமாகிய அதை, சிலுவையில் சிந்தப்பட்ட இரத்தத்தை நினைவு படுத்தக் கூடியதாயிருக்கிறது. மத்தேயு 26ல், அப்பத்தைக்

குறித்து சொன்னதாவது, "இது என்னுடைய சரீரமாயிருக்கிறது," (26:26). திராட்சை ரசத்தை குறித்து அவர் இது புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது " என்று சொன்னார் (மத்தேயு 26:28 ). இந்த வசனங்களின் அடிப்படையில், சிலர் தவறாகப் புரிந்து கொண்டு, அப்பமும் திராட்சை ரசமும் ஆசிர்வதிக்கப்படும் போது, அவை உண்மையாகவே இயேசுவின் சரீரமாகவும் இரத்தமாகவும் மாறுகிறது என்ற முடிவுக்கு வந்து விடுகின்றனர். அவை (ஜெபம் பண்ணின பின்பும்) பார்வைக்கு முன்பு போல காணுகிறது, முன்பிருந்த ருசியே இருக்கிறது. உலகப் பொருளாகவே முன்பு இருந்தது போன்று இருக்கிறது, முன்பு இருந்த (அப்பம் ரசம் ஆகியவற்றின் மூலப்) பொருளாக இப்பொழுது இல்லை என்பது தவிர மற்றபடி ஜெபத்துக்கு முன்பு இருந்தது போலவே இருக்கிறது. எனவே அவர்கள் சொல்லுகிற அர்த்தம் இந்த வசனப்பகுதியில் சொல்லப்படுவதில்லை இயேசு எளிமையான வார்த்தைகளில் அவைகள் தமது இரத்தத்தையும் சரீரத்தையும் நினைவுபடுத்தும் பொருள்களாகக் குறிப்பிடுகிறது என்று சொன்னார்.

யோவான் 10 : 9ல் இயேசு, "நானே வாசல்" என்று சொன்னார். இயேசு இங்கே தாம் நேரடிப் பொருளின் வாசல் என்று குறிப்பிடவில்லை. இரண்டு வசனங்கள் கழித்து, அவர் நல்ல மேய்ப்பனாகத் தம்மைக் குறிப்பிட்டார். மாம்ச நீதியிலான ஆடுகளை மேய்க்கும் மேய்ப்பானாக இயேசு ஒரு போதும் இருந்ததுமில்லை இப்பொழுதும் இருக்கவில்லை, ஆனால் ஆவிக்குரிய வகையில் ஆத்துமாக்களுக்கு பிரதான மேய்பாராக அவர் இருக்கிறார் ( 1 பேதுரு 5 : 4 ) இயேசு வாசலைப்போல அல்லது ஒரு மேய்ப்பானைப் போல இருக்கிறார். அதே போல, கர்த்தருடைய பந்தியின் பொருட்கள் இயேசுவின் சரீரத்தையும் இத்தத்தையும் அடையாளப் படுத்துகின்றன.

1 கொரிந்தியர் 11:24, 25ல் கர்த்தருடைய பந்தியை தமது சீஷர்களுக்கு ஸ்தாபிதம் செய்த அந்த ராத்திரியில் இயேசு சொன்ன வார்த்தைகளை கொரிந்தியர்களுக்கு பவுல் நினைவு படுத்துகிறார். இயேசு தமது சீஷர்களிடம், "என்னை நினைவுகூறும்படி இதைச் செய்யுங்கள்" என்று சொன்றார். இயேசு கர்த்தருடைய பந்தியை நிறுவின படியால், அது முக்கியமானதுதான்.

கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவை நினைவு கூறும்படி சபை ஸ்தாபிக்கப்பட்டு அநேக ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு சபையின் சடங்காச்சாரமாக இது கொண்டுவரபட்டதல்ல. இது இயேசுவால் கொடுக்கப்பட்டது மற்றும் சபையின் தோற்றம் முதலே விசுவாசமுள்ள கிறிஸ்தவர்களால் அது சரிக்கப்பட்டு வந்த ஒன்று. கிறிஸ்து நமக்காக பலியானதை நினைவு கூறும் பொருட்டு நாம் இதிலே பங்கு பெறுகிறோம். ஆகிலும், இதை நாம் துக்கங் கொண்டாடும் ஒரே நேரமாக அனுசரிக்கக்கூடாது. இது மிக வினயமாக அனுசரிக்க வேண்டும் என்பது உண்மைதான். இருப்பினும், 1 கொரிந்தியர் 10 : 16 ல், இது ஆசீர்வாதத்தின் பாத்திரம் என்று சொல்லப்படுகிறது. நமக்கு, இயேசுவின் மரணம் ஒரு மிகப் பெரிய சோகக் காட்சியல்ல, மாறாக, இது மிகப்பெரிய ஈவு நாம் ஒரு போதும் பெற இயலாத மாபெரும் ஆசீர்வாதம்.

## எப்பொழுது நாம் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெற வேண்டும் ?

வெவ்வேறு சபைகளில் பல்வேறுபட்ட வேளைகளில் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறப்படுகிறது. சிலர் மாதத்திற்கு ஒரு முறை பங்கு பெறுகின்றனர், சிலர் மூன்று மாதத்திற்கொருமுறையோ அல்லது குறிப்பிட்ட சில விசேஷித்த நிகழ்ச்சியின் போதோ பங்கு பெறு கின்றனர். சில கலைகளில் வாரத்திற்கு ஒரு முறையும் பங்கு பெறப்படுகிறது. நாம் எப்பொழுது பங்கு பெறவேண்டு மென்ற குறிப்புக் கட்டளை எதுவும் நமக்கு வேதாகமத்தில் கொடுக்கப்படவில்லை, என்று ஜனங்கள் அடிக்கடி சொல்லுவதுண்டு. எப்பொழுதெல்லாம் நாம் பங்குபெற வேண்டும் என்று குறிப்பாகச் சொல்லவில்லை என்பதும் உண்மைதான். ஆனால் ஒரு எதிர்பார்க்கப்படும் வேளை வேகத்தில் இல்லாதிருந்தால், பிறகு ஒருவர் தன் வாழ்நாளிலேயே ஒரே ஒருமுறை பங்கு பெற்றாலும், அதுவும் வசன ரீதியிலாகிவிடும்.

ஆதிசபையின் உதாரணத்தைக் கொண்டு, சபை கூடி வருதலின் நோக்கங்களில் முக்கியமானது ஐக்கிய விருந்து அல்லது "அப்பம் பிட்ருதல்" அப்போஸ்தலர் 20 : 7 ல் நாம் வாசிக்கிறதாவது, "வாரத்தின் முதல் நாளிலே, அப்பம் பிட்கும்படி சீஷர்கள் கூடி வந்திருக்கையில் பவுல்... நடுராத்திரி மட்டும் பிரசங்கித்தான். சபை பவுல்

பிரசங்கிப்பதை மட்டும் கேட்கும் படி கூடிவராமல் அப்பம்பிட்கும்படி, அதாவது கர்த்தருடைய பந்தியில் பங்குபெறும் படி (என்று மற்றொரு பொருள்), கூடி வந்திருந்தார்கள். ஆதிகால கிறிஸ்தவ எழுத்துக்களிலும் கூட சபை ஒவ்வொரு வாரத்தின் முதல் நாள் தோறும் கூடிவந்து ஐக்கிய விருந்திலே பங்கு பெற்றார்கள் என்று சொல்லப்படுகிறது. **1 கொரிந்தியர் 11 : 20ல்,** கொரிந்துவிலிருந்த சபை கர்த்தருடைய பந்தியை புசிக்கும் படி கூடி வந்ததாகக் காண்கிறோம். கூடிவரும் படி கட்டளையிடப்பட்ட நேரம் வாரத்தின் முதல் நாள். நாம் வாரத்தின் முதல் நாளிலே கூடி வருகிறோம், எனவே ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளிலும் நாம் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெற வேண்டும்.

இதிலே அடிக்கடி பங்கு பெறுவதால் இதன் அர்த்தத்தை (வினயத்தை) அது எடுத்துப்போட்டு விடுகிறது, அத்துடன் ஒரு சடங்காச்சாராமாக ஒருவர் அதிலே பங்கு பெறுகிறார் என்பதும் சாத்தியமே. ஆனாலும் தொழுகை செய்து கொள்ளலாம் என வாதிடுவதில்லை. இந்தப் பிரச்சனையைக் குறித்து பவுல் **1 கொரிந்தி 11:28, 29ல்** போதிக்கிறார். வாழ்க்கையை எவ்வளவாய் உணர்ந்தார்கள் என முடிக்கவேண்டும் என எண்ணுகின்றனர். அபாத்திரமாய் எனும் வார்த்தை ஒரு வினையடைச் சொல். இது பந்தியில் பங்கு பெறும் விதத்தில் ஒரு சிறு மாற்றத்தை எதிர் பார்க்கும் சொல். நாம் நம்மை நாமே சோதித்தறிய வேண்டியவர்கள், அதாவது நமக்காக செலுத்தப்பட்ட கிறிஸ்துவின் சரீரத்தையும் இரத்தத்தையும் நினைவில் கொண்டு வரவேண்டும் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். இது மிகவும் வினயமான விஷயம். ஏனெனில் நாம் எந்தவித நினைவு கூடுதலுமில்லாமல் பங்கு பெறுவோமாகில், நமக்கு ஆக்கினைத் தீர்ப்பு வரவழைத்துக் கொள்ளத் தக்கதாக பானம் பண்ணுகிறோம். ஏதோ ஒரு ஆசிர்வாதத்தை மட்டும் நாம் இழப்பதில்லை; நாம் பாவம் செய்து விட்டோம்!

## மாண்புமிகு முன்னாள் தமிழக முதல்வர் செல்வி. ஜெ. ஜெயலலிதா அவர்கள்



1948 - 2016

ஜெ. ஜெயலலிதா என்று அறியப்படும் கோமளவல்லி ஜெயராம் அவர்கள் (4 பிப்ரவரி 1948 – 5 டிசம்பர் 2016) முன்னாள் தமிழக முதல்வரும், அரசியல் தலைவரும், பிரபல முன்னாள் தென்னிந்தியத் திரைப்பட நடிகையும் ஆவார்.

மைசூர் சமஸ்தானம் (தற்போது கர்நாடகா) மாண்டியா மாவட்டத்தில் பாண்டவபுரா தாலுகாவில், மேல்கோட்டை ஊரில் வாழ்ந்த ஜெயராம் – வேதவல்லி இணையரின் மகளாக 24 பிப்ரவரி 1948 ஆம் நாள் பிறந்தார்.

ஜெயலலிதா அவர்கள் பிஷப் காட்டன் பெண்கள் உயர்நிலை பள்ளியில் படித்தார். சென்னைக்கு வந்த பின்னர், 1958 ஆம் ஆண்டு வரை சர்ச் பார்க் ப்ரேசெண்டேஷன் கான்வென்ட்டில் படித்து மெட்ரிக் தேறினார். அந்த நாட்களில் அவர் அங்கிருந்த சிற்றாலயத்தில், அடிக்கடி புதிய ஏற்பாட்டை படித்து ஜெபிக்கிற பழக்கமுடையவராக இருந்தார்.

அரசியலுக்கு நுழைவதற்கு முன்னர் இவர் 120றக்கும் மேற்பட்ட தமிழ், தெலுங்கு, கன்னட மொழித் திரைப்படங்களில் முன்னணிப் பாத்திரங்களில் நடித்திருந்தார்.

இவர் தமிழக முதலமைச்சராக 1991 முதல் 1996 வரையும், 2001 ஆம் ஆண்டில் சில மாதங்களும், பின்னர் 2002 முதல் 2006 வரையும், 2011 முதல் 2014 வரையும் இருந்தார். 2015 மே 23 முதல் இறக்கும் வரையில் (5 டிசம்பர் 2016) முதலமைச்சராக பணிபுரிந்தார்.

முன்னாள் முதல்வர் ம.கோ. இராமச்சந்திரனின் இறப்புக்குப் பின்னர் அவரது அரசியல் வாரிசாக ஜெயலலிதா அவர்கள் தன்னை அறிவித்துக் கொண்டார்.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளராக இருந்த இவரை “புரட்சித் தலைவி” எனவும் “அம்மா” எனவும் இவரது ஆதாவாளர்கள் அழைப்பர்.

5 டிசம்பர் 2016 அன்று இரவு 11-30 மணிக்கு சென்னையிலுள்ள அப்போலோ மருத்துவமனையில் காலமானார். ஜெயலலிதா அவர்களின் பூதவுடல் எம்ஜிஆர் நினைவிடத்திற்குப் பக்கத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

சிறப்பு செய்தி

# ஏன் தேவனுக்கு நன்றி செலுத்த வேண்டும் ?

## Reasons for Thanksgiving to God

சகோ. கிங்ஸ்லிராஜா



"நீ தேவனுக்கு ஸ்தோத்திரபலியிட்டு, உன்னதமானவருக்கு உன் பொருத்தனைகளை செலுத்தி....." ( **சங் 50:14** )

பிரியமானவர்களே ! பரலோக தேவனுக்கு நன்றி செலுத்துவது என்பது நம்மில் பலருக்கு, சிரமமற்றதாகவும், நஷ்டமில்லாததாயும், பெருமுயற்சி இல்லாததாகவுமே இருக்க வேண்டும் என விரும்புகிறோம். ஒரு உன்மையான (அல்லது) தரமான "நன்றி செலுத்துதல்" என்பது மேலே குறிப்பிடபட்ட வசனத்தின் அடிப்படையில் அமைந்தால் நன்றாக இருக்கும். வேதாகமத்தின் தேவனுக்கு பலிகளும், பொருத்தனைகளும் பிரியமானதால், பல தேவதாசர்கள், அதினால் தேவனுக்கு ஸ்தோத்திரத்தை (அல்லது) நன்றியை காணிக்கையாக செலுத்தினர்.

முயற்சி யெடுத்து நம்மை அறவில்லாமல் ஆசீர்வதிக்க வேண்டும் : நானோ, என்னால் முடிந்ததை தேவனுக்கு கொடுப்பேன் : இல்லையேல் வாயாலே நன்றி மட்டும் சொல்லுவேன்'' என்பது தான் இன்று அநேக கிறிஸ்தவர்களின் இயல்பு.

"கர்த்தரைத் துதித்து, அவருடைய நாமத்தை பிரஸ்தாபமாக்குங்கள்: அவருடைய செய்கைகளை ஜனங்களுக்குள்ளே பிரசித்தப்படுத்துங்கள் " ( **1 நாளா 16:8** ).

நம்மில் எத்தனை பேர், தேவனுக்கு நன்றி செலுத்துவதற்காக, அவருடைய செயற்கைகளையும் அவர் அருளிய இரட்சிப்பையும் மற்றவர்களுக்கு சொல்லுவதை ஒரு பொருளாக பயன்படுத்துகின்றோம்.

"ஸ்தோத்திரபலிகளைச் செலுத்தி, அவருடைய கிரியைகளை ஆனந்த சத்தத்தோடே விவரிப்பார்களாக" ( **சங் 107 : 22** ).

இங்கே ''ஸ்தோத்திரபலி'' என்பது நன்றி செலுத்துவதற்கு இளகிய இருதயமும், முயற்சியும், பொருளும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் என மேலே குறிப்பிடப்பட்ட வசனங்களினால் புரிந்து கொள்ள முடிகிறது.

ஆம் ! தேவனுக்கு நன்றி செலுத்த முதலாவது, நம்முடைய மனம் நன்றி உணர்வினால் பெருக்கடுத்திருக்க வேண்டும். அந்த உணர்வாலும், நம் தேவனுடைய குணாதிசயம் மற்றும் இயல்பினால் நம் இருதயத்தில் நன்றி பெருக்கெடுக்க வேண்டும்.

"கர்த்தரைத் துதியுங்கள் : அவர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளது" ( **சங் 107:1** )

"கவனமுள்ள ஆத்துமாவைக் கர்த்தர் திருப்தியாக்கி, பசியுள்ள ஆத்துமாவை நன்மையினால் நிரப்புகிறாரென்று..."

இவ்வசனங்களின் அடிப்படையில், நன்றி உணர்வானது, நம்முடைய தேவன் நல்லவர், கிருபையுள்ளவர், தேவையுள்ளவர்களை திருப்தியாக்குகிறவர், நன்மையினால் நிரப்புகிறவர் என்ற அவருடைய குணாதிசயம், இயல்பினால் அந்த உணர்வு வர வேண்டும்.

இரண்டாவதாக, தேவனுக்கு நன்றி செலுத்த நாம் முயற்சியெடுத்து அதை செய்ய வேண்டும். அதாவது, அதில் நம்முடைய மனிதன் உணர்வையும் தாண்டி பிரயாசம் உள்ளடக்கி இருக்க வேண்டும்.

"அவர் வாசல்களில் ஆதியோடும், அவர் பிரகாரங்களில் புகழ்ச்சியோடும் பிரவேசித்து, அவரை துதித்து, அவருடைய நாமத்தை ஸ்தோத்தரியுங்கள் "( **சங் 100:4** )

"ஸ்தோத்திர பலிகளைச் செலுத்தி, அவருடைய கிரியைகளை ஆனந்த சத்தத்தோடே விவரிப்பார்களாக" ( **சங் 107:22** )

மேலே உள்ள வசனங்களின்படி, தேவனுக்கு சிறந்த நன்றி செலுத்துதல் அவருடைய சமூகத்திற்கு முயற்சி செய்து வந்து ஒவ்வொரு முறையும் நன்றி செலுத்துவதாகும். மேலும் அந்த நன்றி செலுத்துததில் செயல்வடிவில் அவருக்கு மகிமை ஏறெடுக்கப்பட வேண்டும். ஸ்தோத்திர பலிகளை

“செலுத்தி”,... “விவரிப்பார்களாக”. அவருடைய மகத்துவத்தை, இரட்சிப்பை மற்றவர்களுக்கு முயற்சி செய்து விவரிக்க வேண்டும்.

சங்கீதக்காரன் கூறுகையில் , “கர்த்தர் எனக்கு செய்த எல்லா உபகாரங்களுக்காகவும், அவருக்கு என்னத்தைச் செலுத்துவேன். இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு, கர்த்தருடைய நாமத்தை தொழுதுகொள்வேன். நான் கர்த்தருக்கு செய்த பொருத்தனைகளை அவருடைய ஜனங்களெல்லாருக்கு முன்பாகவும் செலுத்துவேன்”. என்று

**சங் 116 : 12 – 14**ல் கூறுகிறார்.

மேலே உள்ள வசனத்தில் நாம் மூன்று பகுதிகளை நன்றி செலுத்துதல் என்னும் பலியில் காண்கிறோம்.

‘‘கர்த்தர் எனக்கு செய்த எல்லா உபகாரங்களுக்காகவும், அவருக்கு என்னத்தை செலுத்துவேன்”

– நன்றியுணர்வினால் நிறைந்த மனம்!

“...கர்த்தருடைய நாமத்தை தொழுதுகொள்வேன் ... ஜனங்களெல்லாருக்கு முன்பாக செலுத்துவேன்”

– முயற்சி செய்து, செயல் வடிவில் நன்றி செலுத்துவது

“..கர்த்தருக்கு செய்த பொருத்தனைகளை...”

– நன்றி செலுத்துதலில் ஒரு விலை உள்ளடக்கி இருக்க வேண்டும்!

பிரியமானவர்களே, நினைக்கும் சக்தி இல்லாதவர்களால் தான் நன்றி செலுத்த முடியாது ! இந்த ஆண்டு இறுதியில், நம் தேவனுக்கு நன்றி செலுத்த பல காரணங்கள் இருக்கின்றது. அவைகளை எண்ணி, எண்ணி ஒவ்வொரு நாளும் தேவ சமூகம் சென்று, நன்றியுள்ள இருதயத்தடன், விலைமதிப்புள்ள நன்றிகளை செலுத்துவோம். ஏழை எளியவர்கள், திக்கற்றவர்கள், விதவைகளை நினைத்துப் பார்த்து, தேவன் விரும்பும் நன்றி பலிகளை செலுத்துவோம் ! தேவன் நம்மை ஆசீர்வதிப்பராக!

## Gospel Through Media by World Evangelism Team

**Philemon Rajah & Kingsly in Tamil on Tamilan TV :** Every Sunday 6.45 - 7.00 a.m (TAMILNADU Contact Mobile : ***92 4421 4421 & 92 4431 4431***) ***Nambikai TV :*** *Every Friday 6.00 - 6.30 a.m.*

**Rajnayagam & Benny Martin in Tamil on Tamilan TV :** Every Monday 7.00 - 7.15 a.m., Every Thursday 9.30 - 10.00 a.m. and Every Saturday 7.15 - 7.30 a.m. - Contact : 98427 30382

**Arjunan in Tamil on Nambikai TV & Radio :** TV : Every Monday & Saturday 7.30 - 7.45 p.m. Radio : Every Saturday 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (TAMILNADU Contact Mobile : 94435 58041)

**Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Aradharana TV :** Every Sunday 6.00 p.m. and Saturday 8.00 a.m. **Rakshana T.V :** Every Wednesday 6.30 p.m. and Thursday 2.30 a.m. (ANDRAPRADESH Contact Phone : 088423 63722)

**P.R. Swamy & Douglas in Tamil on Radio :** Every Sunday to Wednesday at 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (KARNATAKA Contact Mobile : 098440 70763)

**P.K. Varghese in Malayalam on JaiHind TV :** Every Saturday 6.00 - 6.30 a.m. on Jai Hind Channel.

(KERALA Contact Mobile : 94470 35465)

**Sunny, Francis & Vinay David in Hindi on Shubh Sandesh TV :** Every Tuesday 7.00 - 7.30 on Shubh Sandesh Hindi Channel. (NEW DELHI Contact Mobile : 098108 96789)

# தொடர் 13 பெர்கமு சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது (வெளி. 2:12 -17)

பெர்கமு எனும் பட்டணம் சுமார் 400 ஆண்டுகளாக தலைநகர் அந்தஸ்தைப்பெற்று ஒரு உதாரணமாக விளங்கிய பட்டணமாகும். தெளிவான தோற்றத்துடன் அமைக்கப்பட்ட உயர்ந்த மலையின் மேல் இடம் பெற்றிருந்தது. அலெக்ஸாந்திரியாவுக்கு அடுத்து சுமார் 2 லட்சம் புத்தகங்களைக் கொண்ட நூலகம் அங்கே இருந்தது. கடற்கரையை ஒட்டி இருந்த இப்பட்டணம் சிமிர்னாவிலிருந்து 60வது மைலில் இருந்தது.

## மதப் பின்னணி (வெளி. 2:12, 13)

அங்கே ஜீயஸ் எனும் அஞ்சான தெய்வ வணக்கம் பிரசித்தி பெற்றது. அவன் தேவர்களுக்கெல்லாம் தலைவன் என்று கருதப்பட்டான். ரோமர்களும் கிரேக்கர்களும் அப்படி நம்பிக்கை கொண்டிருந்தனர். பெர்கமு பட்டணத்து அரசன் தனது எதிரிபடையுடன் போரிட்டு வெற்றிபெற்றதால், ஜீயஸ்க்கு பிரமாண்டமான கோவிலை எழுப்ப கட்டளையிட்டான் அக்கோவில் 120 அடி, நீளம் , 112 அடி அகலம், 20அடி உயரத்தில் கட்டப்பட்டது. இதன் வெளிப்புற மதிலில் வரையப்பட்ட சுவர்ச் சித்திரங்கள் தங்களுடைய எதிரி படைகளிடமிருந்து கிரேக்க தேவர்கள் தங்களுக்கு அளித்த வெற்றிகளை பறை சாட்டுவதுபோல் வரையப் பட்டிருந்தன.

அங்கு வணங்கப்பட்ட மற்றொரு அஞ்ஞான தெய்வம் "ராகு-கேது" என்று நம் மக்கள் அழைக்கிற பின்னால் பாம்புகள் இரண்டும் ஒன்றையொன்று எதிர்நோக்கியிருப்பதுபோல் அமைக்கப்பட்டிருந்தது. இந்தச் சின்னம் அதன் கோவில் முகப்பில் வைக்கப்பட்டு அதை வணங்குவோர் சுகம் பெற்று வியாதி நீங்குவதாக நம்பிக்கை கொண்டிருந்தனர். பாம்பு தன் தோலை உரித்துப்போட்டு புத்துணர்வு பெறுவது போல, வியாதிப்பட்டவர்கள் இதை வணங்கினால் புத்துணர்வு பெறுவர் என்று நம்பினர். எனவே உள்ளூரிலிருந்தும் வெளியூரிலிருந்தும் ஏராளமானோர் வந்து வணங்கிச் சென்றனர். சர்ப்பத்தின் வஞ்சகம் ஏதேனில் சாத்தானால் அமல்படுத்தப்பட்டது முதல் இந்த நிமிடம் வரை தொடர்வது நம் கண் முன் நடக்கும் காட்சி இது இன்றும் மருத்துவ மனைகள், மருந்து கம்பெனிகள், மருந்து சீட்டுகளில் இந்த ராகு - கேது முக்கிய பங்கு வகிக்கிறது. இன்று உலகில் உள்ள எந்த விக்கிரகத்தோடும் பாம்பு சம்மந்தப்பட்டிருப்பது நிதர்சனமாய்க் காணுகிறது.

சாத்தானின் ஆதிக்கத்தை வலியுறுத்துகிற காட்சியை கர்த்தர் அடையாளப்படுத்தும் பொருட்டு, "எனக்கு உண்மையுள்ள சாட்சியான அந்திப்பா கொல்லப்பட்டான்" என்றும் **(வச.13)** "பாலாக்கிற்கு பிலேயாம் போதித்தவைகளை கை கொண்டு" விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளைப் புசிப்பதற்கும் வேசித்தனம் பண்ணுவதற்கும் ஏதுவான இடறலை ஏற்படுத்தியவர்கள்" சபையில் இருந்துள்ளனர், என்ற "அப்படியே நிக்கோலால் மதஸ்தருடைய போதனைகளை கை கொள்ளுவர்களும் இருந்தார்கள்". **(வெளி. 2:14)**

இப்படி, விக்கிர வணக்கம், கொலை செய்யப்பட ஏதுவான அச்சுறுத்தல், சக்கரவர்த்தி புசிக்கவும் வேசித்தனம் பண்ணவும் ஏதுவான இடறல்கள், நிக்கோலால் மகஸ்தலின் போதனை, பிலேயாமின் போதனை ஆகியவற்றை கை கொள்வோரின் உபதேசம் : இவைகளால் சபையில் பெரிய போராட்டம் நிகழ்ந்து கொண்டிருந்தது. ஆகிலும் விசுவாசிகள் தங்கள் விசுவாசத்தை விட்டு விடாமலும் மறுதலியா மறும் தலத்திருந்தனர். இது அவர்களுடைய நிறைவைக் காட்டுகிறது.

இதினாலடதான் தமது அறிமுகத்தில் கர்த்தர் " ... இருபுறமும் கருக்குள்ள பட்டயத்தை உடையவர் சொல்லுகிறதாவது" என்று குறிப்பிட்டார். **(வச. 12 ).**

## பெர்கமு சபையாரிடம் காணப்பட்ட குறை.

"ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்" என்பது வழக்குச் சொல் மேற் குறிப்பிட்ட நிறைவைக் கொண்டிருந்த அந்த சபையில் சில விசுவாசிகள் தங்கள் போதனைகள் செயல்களிலும் மாறுபாடுகளைக் கொண்டிருந்தனர். அவை :

**1. பிலேயாமின் போதனைகளை கைகொண்டவர்கள்.**

எண்ணாகமம் 22-25 அதிகாரங்களில் பிலேயாமின் போதனையும் பின்னணி வரலாறும் விவரிக்கப்படுகிறது. அதன் உட்கருத்தை விவரித்து பேசும் பேதுரு, புதிய ஏற்பாட்டிலும் அவனுடைய மாறுபாடான போதனைகளைப் பின்பற்றுவோரைக் குறிப்பிட்டு," ... பொருளாசைகளில் பழகின சாபத்தின் பிள்ளைகள். செம்மையான வழியை விட்டுத் தப்பி நடந்து, பேயோரின் குமாரனாகிய பிலேயாமின் வழியை பின்பற்றிப் போனவர்கள் : அவன் அநீதிததின் கூலியை விரும்பி, தன்னுடைய அக்கிரமத் தினிமித்தம் கடிந்து கொள்ளப்பட்டான் : பேசாத மிருகம் மனுஷர் பேச்சைப் பேசித்தீர்க்கதல சியினுடைய மதிகேட்டைத் தருந்தது," என்றார் **(2 பேதுரு 2: 14–16 ).**

எண்ணாகமம் 25ல், பாலாக் எனும் மோவாபின் ராஜா தனது நாட்டு சமவெளியில் பாளையம் இறங்கியிருந்த இஸ்ரவேலரை சபிக்க பரிதானம் கொடுத்து பிலேயாம் தீர்க்கதரிசிக்கு பொருளாசையைத் தூண்டினான். கர்த்தரின் பதிலைக்கேட்டு பிலேயாம் இஸ்ரவேலரை சபிக்க மறுக்கிறான். மீண்டும் மீண்டும் பாலாக் நச்சரித்து கொண்டிருந்த படியால், பிலேயாம் ஒரு தீமையான ஆலோசனையைக் கொடுத்தான். அதன்படி "இஸ்ரவேல் சித்தீமிலே தங்கியிருக்கையில், ஜனங்கள் மோவாபின் குமாரத்திகளோடே வேசித் தனம் பண்ணத் தொடங்கினார்கள்.'' மேலும் "தேவர்களுக்கு இட்ட பலிகளை... ஜனங்கள் போய் புசிந்து, அவர்கள் (மோவாபின்) தேவர்களைப் பணிந்து கொண்டார்கள்'' **(எண்ணாகமம் 25:1,2).** இது பிலேயாம் தானே இஸ்ரவேலை சபிக்க கூடாத படியால் தேவனே அவர்களை சபிக்கும் படி பிலேயாம் செய்த ஒரு தந்திரம் **(எண்ணகாமம் 31 : 16 ).** இப்படிப்பட்ட மாறுபாடுகளை பெர்முவில் இருந்த சிலர் கை கொண்டிருந்ததை கர்த்தர் குறிப்பிட்டு காட்டுகிறார் **(வெளி. 2:14 ).**

மேலும் நிக்கோலாய் மதஸ்தருடைய போதனைகளை கை கொண்டிருந்தனர். நிக்கோலாய் மதஸ்தர்கள் ஆத்ம அறிவை பெற்றோர் தாங்களே என்று இறுமாப்பு அடைந்திருந்தவர்கள். இது கிறிஸ்துவத்துக்குள் இருந்த ஒரு உட்குழு. இவர்களுடைய போதனைகளெல்லாம் கர்த்தருடைய உபதேசத்துக்கு முரணானவை. அவைகளில் ஒன்று தேவனுடைய பிள்ளைகள் பாவஞ் செய்யலாம் : ஆகினும் தேவனுடைய கிருபை அவர்களைச் சூழ்ந்து கொள்ளும். அவர்கள் மனந்திரும்பினாலும் மனந்திரும்பாமல் போனாலும் தேவன் அவர்களை தமது இரக்கத்தால் மன்னிக்கிறார், என்கின்றனர். இப்படியாக அவர்கள் தங்களுக்குக் கிடைக்கப்பெற்ற கிருபையை "காம விவாகரத்துக் கேதுவாகப் புரட்டினார்கள்... **( யூதா 4 ).**

பெர்கமு சபையாரும் இந்தப் பாவத்துக்கு உடன் பட்டிருந்தார்கள் **(வெளி. 2:15),** இந்தக்குறைகளை கர்த்தர் சுட்டிக் காட்டினார். சபையில் இருந்த மற்றவர்கள் இவ்வித தவறுகளோடு ஒத்துபோனதால் கர்த்தர் மனஸ்தாபப்படுகிறார்.

ஆதாலால் எச்சரிக்கை

"நீ மனந்திரும்பு, இல்லாவிட்டால் நான் பட்டயத்தால் அவர்களோடே யுத்தம் பண்ணுவேன் " **(வெளி.2:16)** கர்த்தருடன் யுத்தம் பண்ணினால் ஜெயிக்கப்போவது யார்?

இதன் தொடர்ச்சி அடுத்த இதழில்

**இ.ஏ. ஆறுமுகம்**
திண்டுக்கல்

**நவம்பர் மாத சிறுவர் பகுதி பதில் எழுதியவர்கள்**

1. M. வின்செண்ட் – கோவை
2. J. ரிச்சர்ட் ஞானசேகர் – திருச்சி
3. I. ஷீபா பிரியதர்ஷினி – சிவகங்கை
4. Mrs. ரூப ஜெபராஜ் – மதுரை

**சென்ற மாதம் பெயர் விடுபட்டவகள்**

1. Mrs. ஹெப்ஸி தாமஸ் – படப்பை
2. D. கண்ணன் – நெல்லை

# தொடர் 16 நீதிமொழிகள் : நடைமுறை ஞானத்தின் புத்தகம்

வாசிக்க வேண்டிய அதிகாரங்கள் : **1, 3, 5, 6, 8, 25, 30, 31.**

## தலைப்பு

நீதிமொழிகள் என்ற இப்புத்தகத்தின் தலைப்பு இதில் உள்ள முதல் வரியில் இருந்து வந்ததாகும். "நீதிமொழி" என்பதற்குரிய எபிரெய வார்த்தை *mashal* என்பதாகும் : இதற்குச் சமமான கிரேக்க வார்த்தை *paroimiai* என்பதாகும். இவ்விரு வார்த்தைகளுமே "ஒரு ஒப்பீடு" என்பதைச் சுட்டிக்காண்பிக்கின்றன. நீதிமொழி என்பது "ஒரு சிறு, பொருள் பொதிந்த (தன்னிலேயே சாட்சியுடைய) நிலையான உண்மைக் கூற்று" என்று விளக்கப்படுகிறது.

## பின்னணி :

தேவபக்தியான வாழ்க்கைக்கு சங்கீதங்களின் புத்தகம் உதவுவதுபோல், நடைமுறை வாழ்விற்கு நீதிமொழிகளின் புத்தகம் உதவுகிறது. சங்கீதங்களின் புத்தகம் தேவனை நோக்கி இருதயத்தை வெதுவெதுப்பாக்குகிறது : நீதிமொழிகளின் புத்தகம் மனிதர்களை நோக்கி முகத்தைப் பிரகாசிக்க செய்கிறது.

ஞானத்தை ஊட்டுதல் என்பதே நீதிமொழிகளின் புத்தகத்தின் எடுத்துரைக்கப்பட்ட நோக்கமாக உள்ளது (1 : 1 முதல்.). நீதிமொழிகளின் புத்தகம், "ஒரு கவிதை புத்தகமாய்'' இருப்பதுடன் கூடுதலாக ''ஞான இலக்கியம்'' என்றும் வகைப்படுத்தப்பட்டுள்ளது. ஞானம் என்பது "அறிவின் நடைமுறைப் பயன்பாடு" என்று விளக்கப்பட்டுள்ளது : நீதி மொழிகளில் உள்ள ஞானம் அதை உள்ளடக்குகிறது, ஆனாலும் இன்னும் ஆழமாக செல்கிறது. அது "விசையங்களைத் தேவன் காண்பதுபோல் காணவருதலாக'' உள்ளது. "கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்" (9; 10: 1:7 ஐயும் காணவும்).

ஞானம் இந்தப் புத்தகத்தில் நீதிமொழிகளின் மூலம் ஊட்டப்படுகிறது. நீதிமொழி என்பது பெரும்பான்மையான மக்களால் அங்கீகரிக்கப்படுகிற பொதுவான உண்மையாக உள்ளது. "தன் வேலையில் ஜாக்கிரதையாயிருக்கிறவனை நீ கண்டால், அவன் நீசருக்கு முன்பாக நில்லாமல், ராஜக்களுக்கு முன்பாக நிற்பான்'' (22:29). அப்படிப்பட்ட மனிதன் வெற்றிநிரைந்தவனாக இருப்பான் என்பது உலகளாவிய உண்மையாயிராமல் பொதுவான உண்மையாக உள்ளது.

பொருளாதார சூழ்நிலைகள் மிகவும் உணர்வுப்பூர்வமான ஜாக்கிரதையாய் இருத்தலையும் விலக்கி வைக்க முடியும். மற்ற எல்லா விஷயங்களும் சமமாக இருக்கையில், ஜாக்கிரதையற்ற மனிதரைக் காட்டிலும் ஜாக்கிரதையாய் இருக்கும் மனிதர் அதிகம் வெற்றியடைவார். ஒரு பாடக்கருத்தில் இருந்து இன்னொரு பாடக்கருத்திற்கு, அவற்றின் ஆய்வுப் பொருள்களுக்கிடையில் சிறிதளவே தொடர்பு உடைய நிலையில் மாறிச் செல்லுகிறது. அதிகமான மக்கள் வாசிக்க முடியாதவர்களையும், ஒருசில கையெழுத்துப் பிரதிகளே கிடைக்ககூடியதாகவும் இருந்த நிலையில், படிப்பிப்பதற்கு, நீதிமொழிகள் ஒரு முக்கியமான கருவியாக இருந்தன. நீதிமொழிகள் சுலபமாக மனப்பாடம் செய்யகூடியவைகளாயிருந்தன. இவைகள் இளைஞர்களுக்குப் போதிக்க விசேஷித்த வகையில் பயன்மிக்கவைகளாய் இருந்தன (1:8, 10: 2:1: முதலிய வசனங்களில் உள்ள "என் மகனே" என்ற சொற்றொடரைக் கவனிக்கவும்).

சாலொமோன் இந்தப் புத்தகத்தின் பிரதான எழுத்தாளராய் இருக்கின்றார் (1:1: 10:1 :25:1). சாலொமோன் தமது மத்திய வயதில் இப்புத்தகத்தை எழுதினார் என்று யூதப்பாரம்பரியம் கூறுகிறது. அவர் எழுதிய மூவாயிரம் நீதிமொழிகளில் (1 இராஜாக்கள் 4:32), இவைகள் பாதுகாக்கப்பட்டுள்ளன. ஆகூர்(30:1), மற்றும் அரசரான லேமுவேல் (31:1) உட்பட, மற்ற எழுத்தாளர்களும் இப்புத்தகத்திற்குப் பங்களித்துள்ளனர். சிலர் "லேமுவேல்" என்பது பத்சேபாள் தனது மகன், சாலொமோனுக்கு இட்டிருந்த செல்லப்பெயர் என்று நினைக்கின்றனர்.

“எசேக்கியாவின் மனுஷர்” (25:1) என்பவர்கள் இப்புத்தகத்தின் நிறைவான தொகுப்பாளர்களாய் இருந்தனர் என்பது உறுதி.

## வரை குறிப்பு

நீதிமொழிகளின் புத்தகம், சங்கீதங்களின் புத்தகம்போன்றே ஐந்து புத்தகங்களாக அமைவு செய்யப்பட்டுள்ளது:

I. ஞானத்தைப் புகழ்தல் பற்றிய “சாலொமோனின் நீதிமொழிகள்” (1-9).

II. பல்வேறு பாடக்கருத்துகளின் மீதான “சாலொமோனின் நீதிமொழிகள் (10-24).

III. ஒருவேளை, பொருளாதாரத்தின் மீதான வலியுறுத்தத்துடனான எசேக்கியாவின் தொகுப்பு (25-29).

IV. பிரதானமாக இயற்கையின் மீதான “ஆகூரின் வார்த்தைகள்” (30).

V. “அரசர் லேமுவேலின் வார்த்தைகள்,” அவருடைய தாய் சம்பந்தப்பட்டது (31).

வழக்கமாக இப்புத்தகம் பாடக்கருத்துக்களைக் கொண்டு படிக்கப்படுகிறது. இங்கு நடைமுறைப் பாடக்கருத்துக்கள் சில தரப்படுகின்றன.

1. வேலை (6:6-11: 14:23: 18:9: 19:24: 22:13, 29:24:30-34).
2. நேர்மை (11:1, 3: 16:11: 20:17).
3. சுய கட்டுப்பாடு (14:17, 29: 15:18: 16:32: 19:11: 25:28).
4. குடித்தலும் குடிபோதையும் (20:1: 23:20, 21, 29-32: 31:4-7).
5. நாவு (10:18, 19: 11:13: 12:22, 25: 13:3: 15:23: 18:21: 25:11).
6. வாய்ச்சண்டையிடுதல் (9:13: 21:9, 19: 25:24: 27:15).
7. மனைவியாகவும் தாயாகவும் இருத்தல் (5:18-20: 11:16, 22: 12:14: 14:1: 18:22: 19:14: 31:10-31).
8. பிள்ளைகளை ஒழுங்குபடுத்துதல் (13:24: 19:18: 22:15: 23:13, 14: 29:15, 17).

## நீதிமொழிகள் புத்தகத்தில் இருந்து பாடங்கள்

சங்கீதங்களின் புத்தகத்தைப்போன்று, நீதிமொழிகள் புத்தகமும் உலகளாவிய வேண்டுகோளைக் கொண்டுள்ளது. இந்தப் புத்தகத்தின் சிறுபகுதி யூதத்துவ தனித்தன்மையுடன் உள்ளது: இஸ்ரவேல் என்ற பெயர் காணப்படுவதில்லை, பண்டிகைகள், முதலானவை குறிப்பிடப்படுவதில்லை. இப்புத்தகத்தில் காணப்படுகிற சத்தியங்கள் சாலொமோனின் நாட்களில் இருந்தது போன்றே இன்றைக்கும் பொதுவாக உண்மையாகவே உள்ளன.

இப்புத்தகம் “ஒரு இளம் மனிதர் பின்பற்றக்கூடிய வெற்றிக்கான கையேடு” என்று அழைக்கப்பட்டுள்ளது. ஆனால் இது உலகம் விவரிக்கின்றபடியான வெற்றியாக இருக்க வேண்டும் என்று அவசியமில்லை. நீதிமொழிகளின் புத்தகம் தேவன்மீது கொண்டுள்ள பயபக்தியின் அடிப்படையிலான வாழ்வுமுறையைப்பற்றிக் கூறுகிறது. மற்றும் ஞானம் ஆகியவற்றிற்கான பிறபுத்தகங்களைப்போல், “கர்த்தருக்குப் பயப்படுதல்” என்பது இந்தப் புத்தகத்தின் திறவுகோல் சொற்றொடராக உள்ளது (1:7, 29: 2:5: 8:13: 9:10: 10:27 14:26, 27: 15:16, 33: 16:6: 19:23: 22:4: 23:17: 31:30). “கர்த்தருக்குப் பயப்படுதல்” என்ற சொற்றொடர், தேவன்மீது ஆழமான மரியாதையையும் நிலையான பயபக்தியையும், நமது வாழ்வு உட்பட எல்லாவற்றிற்கும் அவரே ஆட்சியாளர் என்று ஒப்புக்கொள்தையும் குறிக்கிறது. பூரணமான அன்பு என்பது தண்டனை பற்றிய பயத்தைப் புறம்பே தள்ளிவிடலாம் (1 யோவான் 4:18), ஆனால் அது “கர்த்தருக்குப் பயப்படுதலை” தள்ளிவிட முடியாது மற்றும் கூடாது (மத்தேயு 10:28: நடபடிகள் 10:35: 2 கொரிந்தியர் 7:1: எபிரெயர் 12:18: வெளிப்படுத்தின விசேஷம் 11:18: முதலியன).

இயேசுவின் நடைமுறை போதனை அடிக்கடி நீதிமொழிகளின் புத்தகத்தில் உள்ள போதனைகளை எதிரொலித்து. அவர் அடிக்கடி உவமைகளில் போதித்தார். (எபிரெயம் மற்றும் கிரேக்க மொழிகளில் உள்ள மூல வார்த்தைகள் “நீதிமொழி” மற்றும் “உவமை” ஆகியவற்றிற்கு இடையில் வித்தியாசம் எதையும் ஏற்படுத்தவில்லை : இவ்விரண்டுமே ஒப்பீடுகளை ஏற்படுத்துதலினால் போதித்தன.)

# நன்றி செய்த ஒரு மனுசன் !



Hai குட்டிச் செல்லங்களா! எப்படி எல்லாரும் நல்லாயிருக்கிறீர்களா ? உங்கள் யாவரையும் நம் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே வாழ்த்துகிறேன்.

புதுவருஷம் வரப்போகிறதை நினைத்து சந்தோஷமாய் இருப்பீர்கள். புத்தாடைகள், கேக், பலகாரங்கள் இவைகளை எல்லாம் நினைக்கும் போது உங்களுக்கு ரொம்ப மகிழ்ச்சியாயிருக்கும். இந்த சந்தோஷத்தோடே ஆண்டவர் இயேசு நம்மிடம் எதிர்பார்க்கும் ஒரு காரியத்தை குறித்து கற்றுக்கொள்ளலாமா!



ஆண்டவர் இயேசு, ஒருமுறை கலிலேயாவுக்கு எதிரான கதரேனருடைய நாட்டிற்கு, தமது சீடர்கள் பன்னிருவருடனே படகிலே சென்றார். அங்கே அவர் படகிலிருந்து இறங்கினப் போது, பிரேதக் கல்லரையில் தங்கியிருந்த அசுத்த ஆவியுள்ள ஒரு மனுஷன் இருந்தான். அவனை சங்கிலியை வைத்து கட்டவோ , விலங்கினால் கட்டவோ ஒருவராலும் முடியவேயில்லை. அப்படி யாராவது கட்டினாலும் அதையும் முறித்துபோட்டுவிடுவான். அவன் இரவும், பகலும் கல்லறையிலே குடியிருந்து, அங்கே கிடக்கும் கல்லுகளினாலே தன்னை தானே காயப்படுத்திக் கொண்டிருந்தான். மேலும் அவன் உடை ஏதும் உடுத்தாமல் இருந்தான்.

அவன் இயேசு வருவதை தூரத்திலே பார்த்தான். உடனே என்ன செய்தான் என்று தெரியுமா ? ஓடிவந்து, ஆண்டவரை பணிந்துக்கொண்டான். இயேசு அவனை நோக்கி : உன் பேர் என்ன என்று கேட்டர். அவனோ தன்னை “லேகியோன்” என்று சொன்னான். ஏனெனில் அவனை அநேகம் பிசாசுகள் பிடித்திருந்தது. ஆண்டவர் இயேசு, அவனை பிடித்திருந்த அசுத்த ஆவிகளை அவனைவிட்டு செல்லும்படி உத்தரவிட்டார். ஆனால் ஆண்டவருடைய உத்தரவை கேட்ட அசுத்த ஆவிகள் அனைத்தும், அவனை விட்டு விலகி, அங்கே இருந்த பன்றிகளுக்குள் சென்று புகுந்தது. அந்த பன்றிக் கூட்டம் உயர்ந்த மலையிலிருந்து விழுந்து இறந்தது.

பிசாசுகள் தன்னைவிட்டு சென்றவுடனே, அந்த அண்ணனுக்கு புத்தி தெளிந்தது, உடை உடுத்தி இயேசுவின் அருகே உட்காந்திருந்தான். அதனை கண்ட அந்த ஊர் மக்கள் அனைவரும் ஆச்சரியப்பட்டனர். தனக்கு இயேசு செய்த நன்மை ஈடாக அவருக்கு நன்றியுள்ளவனாக இருக்கனும் என்று நினைத்தது, “இயேசு புறப்படும் போது, நானும் உங்க கூடவே வர எனக்கு உத்தரவு கொடுங்கள் என்று கேட்டான். அதற்கு இயேசு என்ன சொன்னார் என தெரியுமா ? உனக்கு கர்த்தர் செய்த நன்மைகளை நீ உருக்குள்ளே போய், உன் இனத்தார்க்கும், உன் வீட்டார்க்கும் எல்லாருக்கும் போய் சொல் என்றார். இதைதான் அவர் அவனிடத்தில் நன்றியாக எதிர்பார்த்தார். இயேசுவுக்கு கீழ்படிந்து, அவன் இயேசுவை பற்றி சொன்னான். அவன் சொன்னதைக் கெட்ட எல்லாரும் ஆச்சரியப்பட்டார்கள்.

என் அன்புச் செல்லங்களா! உங்களுக்கும் நம் எல்லாரையும் படைத்த தேவன் இந்த வருஷத்தில் எவ்வளவோ நன்மை செய்திருக்கிறார். இவற்றிற்கு எல்லாம் நீங்கள் தேவனுக்கு நன்றி என்று வாயில் சொல்வது மட்டுமின்றி, அந்த நன்றியை செயலில் காண்பியுங்கள். நன்றி செய்யலாமா? இந்த வருடம் முடிய இன்னும் ஒரு மாதம் தான் உள்ளது. இந்த ஒரு மாதம் ஆண்டவருக்கு நன்றி செய்வீர்களா பைபிள் படிப்பது, ஜெபிப்பது, வாரம் தவறாமல் சர்ச்சுக்கு போவது, வாரத்தின் முதல் நாளில் சிறந்ததை கர்த்தருக்கு கொடுப்பது, ஏழைகளுக்கு உதவுவது, இயேசுவை பற்றி மற்றவர்களுக்கு சொல்வது மற்றும் அம்மா அப்பாவுக்கு கீழ்படிவது போன்றவற்றை செய்வீர்களா? நீங்கள் இதை செய்வதைப்பார்த்து எல்லாரும் ஆச்சரியப்பட வேண்டும். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார்.

**மனை வசனம் : சங்கீதம் 50 : 23**

ஸ்தோத்திர பலியிடுகிறவன் என்னை (கர்த்தர்) மகிமைப்படுத்துகிறான் .....

**– S. அன்பு ஏசுதாஸ்.**

## பாடம் 2 நன்றி மறவா அன்னாள்

சிறுவர் பகுதி

ஹாய் குட்டீஸ்! இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். இந்த முறை தேவன் செய்த நன்மைக்கு, நன்றியை செயலில் காண்பித்த ஒரு தாயை பற்றி தெரிந்துக் கொள்வோமா?

எப்பிராயீம் மலைத்தேசத்திலிருக்கிற ராமதாயீம் என்ற ஊரில் அன்னாள் என்ற ஒரு பெண்மணி இருந்தார். அவர்களுக்கு குழந்தை இல்லை. ஒருமுறை அவள் தன் கணவர் எலக்கானவோடு சீலோவிலே கர்த்தரை பணிந்துக்கொள்ள தேவாலயம் சென்றார். அங்கே அவள் தன் உறவினாரால், குழந்தையில்லாததின் நிமித்தம் மிகவும் அவமானமும் துக்கமும் படுத்தப்பட்டாள்.

அப்பொழுது, அன்னாள் தேவாலயத்திற்கு சென்று, தேவனிடம் வேண்டிக்கொண்டாள். தேவனே! நீர் எனக்கு ஒரு ஆண்பிள்ளை கொடுத்தால், அந்த பிள்ளையை ஊழியத்திற்கென்று கொடுக்கிறேன் என பொருத்தனை பண்ணி ஜெபித்தாள்.

தேவகிருபையால் சிலநாள் சென்றபின், அன்னாள் கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெற்றாள். அவனுக்கு சாமுவேல் என்று பேரிட்டார். பிறகு தன் கணவனிடத்தில் பேசி, தான் தேவனிடத்தில் பொருத்தனை செய்தபடியே குழந்தை பருவத்திலேயே தனது மகன் சாமுவேலை தேவாலயத்தில் கொண்டுவந்து விட்டாள்.



குட்டீஸ் பார்த்தீங்களா ! அன்னாள் என்ற தாய், தனக்கு தேவன் செய்த நன்மையை (நன்றி) மறவாமல், தன் பொருத்தனை நிறைவேற்றி,நன்றியை செயலில் காண்பித்தாள். நாமும் நன்றியை தேவனிடம் வார்த்தையில் மட்டும் சொல்லுகிறவர்களாயிராமல், செயலிலும் காண்போம்.

**மனன வசனம்: சங் 116 : 14**

"நான் கர்த்தருக்குச் செய்த பொருத்தனைகளை அவருடைய ஜனங்களெல்லாருக்கு முன்பாகவும் செலுத்துவேன்".

– **குயினி பிரதீப்.**

## பாடம் 3 நன்றியுள்ள பவுல்

சிறுவர் பகுதி

அன்புள்ள குட்டீஸ்! ஆண்டவர் இயேசுவின் திருப்பெயரால் அன்பின் வாழ்துக்கள் மற்றும் நீங்கள் அனைவரும் அரையாண்டு தேர்வை ( Half Yearly Exam) நன்றாக எழுத எனது ஜெபங்கள்.

பவுல் என்ற ஒரு அண்ணன் இருந்தார். அவருடைய இயற்பெயர் சவுல். அந்த அண்ணன் இயேசு என்று யாரெல்லாம் சொல்லுகிறார்களோ அவர்களை எல்லாம் மிகவும் துன்பபடுத்தினார். ஒருமுறை தமஸ்குவிலிருந்த கிறிஸ்தவர்களை துன்பப்படுத்த சென்று கொண்டிருந்த போது, ஆண்டவராகிய இயேசுவை தரிசித்தார். அதற்கு பிறகு பவுல், தன் வாழ்க்கை முழுவதும் இயேசுவிற்காக வாழ்பவராக இருந்தார்.



பசி, தாகம் , உடையின்மை, கல்லடி, கப்பற்சேதம், துரோகம் என நிறைய துன்பங்களை அனுபவித்தார். ஆயினும் ஆண்டவர் இயேசுவின் சுவிசேஷத்தை உலகம்மெங்கும் உள்ள அநேக நாடுகளுக்கு சென்று அறிவித்தார். சிறையில் அடைத்தாலும் அங்கும் சுவிசேஷம் அறிவித்தார்.

தன்னுடைய பாவத்திற்காக சிலுவையில் மரித்த இயேசுவின் அன்பிற்கு ஈடாக எதையும் செலுத்தமுடியவிடினும், தன் வாழ்வையே இயேசுவை அறிவிக்க அர்பணித்து நன்றியுள்ளவராக வாழ்ந்தார்.

குட்டீஸ் ! பரலோக தேவன் நமக்கும் நிறைய நன்மைகள் செய்துக்கொண்டே இருக்கிறார். நாமும் அதற்கு நன்றியாக நம் வாழ்நாள் முழுவதும், என்ன துன்பம் இன்பம் வந்தாலும், இயேசுவின் சுவிசேஷத்தை அறிவிப்போம். எல்லாம் வல்ல தேவனிடம் நாமும் பவுலை போல நன்றியுள்ள வாழ்வு வாழ ஜெபம் செய்வோம், செயல்படுவோம் கர்த்தர் நம்கூட இருப்பார்.

**மனன வசனம் : சங் 103 : 2** "என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி; அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே."

பாடம் **4**

# நன்றி பலி செலுத்திய நோவா

சிறுவர் பகுதி

அன்பு செல்லங்களே ! உங்கள் அனைவருக்கும் ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் அக்காவின் வாழ்த்துக்கள் ! நாம் இந்த மாதம் நோவாவின் நன்றி பலியை பற்றி தெரிந்துக்கொள்வோமா ? ஏறக்குறைய 4500 ஆண்டுகளுக்கு முன்னால் இந்த உலகமும் பாவத்தினால் நிறைந்து, தேவனை மிகவும் வருத்தப்படுத்திய போது, தேவன் மாபெரும் வெள்ளத்தினால் இந்த உலகத்தை அழித்தார். ஆயினும் அந்த காலத்தில் நோவாவிற்கும் அவனுடைய வீட்டாருக்கும், தேவனுடைய கண்களில் கிருபை கிடைத்ததினால் காப்பாற்றபட்டனர். ஏன் தெரியுமா ? நோவா தன் காலத்தில் வாழ்ந்தவர்கள் அனைவருக்குள்ளும், தேவனுக்கு பயந்து, தீமைக்கு விலகி, நீதிமானாக வாழ்ந்தார். இந்த உலகத்தில் இருந்த அத்தனை காட்டு மிருகங்கள், நாட்டு விலங்குகள், பறவைகள், பிராணிகள் மரம் செடி கொடி அனைத்தும் அழிந்தது . அது மட்டுமா ? மனிதர் அனைவரும் அழிந்து போயினர். நோவாவும் , அவன் வீட்டாரும் மற்றும் பேழைக்குள் இருந்த ஜீவராசிகள் (பறவைகள், விலங்குகள், பிராணிகள்) மட்டும் பாதுகாக்கப்பட்டனர் . 40நாட்கள் இரவும் பகலும் விடாமல் மழை பெய்ததினாலும், பூமியின் ஊற்றுக்கள் எல்லாம் திறவுண்ட படியினாலும் முழு பூமியும் 100 சதவீதம் தண்ணீரால் நிரம்பி இருந்தது.



அந்த மிகப்பெரிய அழிவிலிருந்து தேவன் தங்களை காத்தபடியினால், நோவா தேவனுக்கு நன்றி பலி செலுத்தி அவரை தொழுதுக்கொண்டார். தேவன் நோவாவையும் அவன் குடும்பத்தையும் ஆசீர்வதித்தார்.

குட்டீஸ் ! தேவன் நம்மை இன்றளவும் காத்துக்கொண்டே இருக்கிறார். அதற்கு நாம் ஈடாக ஒன்றும் செய்ய முடியாவிடிலும், நன்றியாக அவரை தொழுது கொண்டே இருப்போம். நோவாவையும், அவன் குடும்பத்தையும் ஆசீர்வதித்த தேவன் உங்களையும் ஆசீர்வதிப்பராக !

**மனன வசனம் : எபி 10 :25** "சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம்; நாளானது சமீபித்துவருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்திசொல்லவேண்டும்"

**– பிரியா ஆண்டனி**

## சிறுவர்க்கான கேள்விகள்

1. பிசாசு பிடித்திருந்தவனுக்கு இயேசு என்ன செய்தார்?
2. பிசாசு பிடித்திருந்தவன் இயேசுவுக்கு என்ன செய்தான்?
3. அன்னாள் தனது நன்றியை தேவனுக்கு எவ்வாறு தெரிவித்தாள்?
4. பவுல் தனது நன்றியுணர்வால் எதை அறிவித்தார்?
5. நோவாவும் அவன் வீட்டாரும் நன்றியை எப்படி வெளிப்படுத்தினர்?
6. நீ எவ்வாறு தேவனுக்கு நன்றியை செயல்படுத்த போகிறாய்?

**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 05-01-2017**

# டிசம்பர் மாத கேள்விகள்

1. 'மற்ற ஒன்பது பேர் எங்கே' என இயேசு ஏன் கேட்டார் ?
2. உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலியை, யாருக்கு செலுத்த வேண்டும் ?
3. பேழையைவிட்டு வெளியே வந்த பின்பு, நோவா என்ன செய்தார் ?
4. யார்கோபை தேவன் ஆசீர்வதித்தற்கு நன்றியாக, அவர் என்ன செய்தார் ?
5. "அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே" என வாசிப்பதெங்கே ?
6. ஸ்தோத்திர பலியிடுகிறவன் யாரை மகிமைப்படுத்துகிறான் ?
7. "என்னை நினைவு கூறும்படி இதை செய்யுங்கள்" என இயேசு சொன்னது என்ன ?
8. "இருபுறமும் கருக்குள்ள பட்டயத்தை உடையவர்" யார் ?
9. அவர் வாசல்களிலும், அவர் பிரகாரங்களிலும் எப்படி பிரவேசிக்க வேண்டும் ?
10. தேவன் அருளிய சொல்லிமுடியாத ஈவுக்காக "..........................................."

**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 05-01-2017**

அனுப்ப வேண்டிய முவகரி : **சகோதரி. பேபி ராஜா**
45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு,
அரசரடி, மதுரை - 625 016
செல்: 92 4421 4421, 92 4431 4431

## நவம்பர் மாத பதில்கள்

| | | |
|---|---|---|
| 1. யோவான் 17:16 | 2. I பேதுரு 1:15 | 3. மல்கியா 2:11 |
| 4. I தெச 4:7 | 5. ரோமர் 12:2 | 6. லேவி 20:26 |
| 7. எபி 13:12 | 8. I யோவா 3:22 | 9. யாக் 5:16 |
| 10. பிலி 4:6,7 | | |

## நவம்பர் மாத கேள்விகளுக்கு பதில் எழுதியவர்கள்

1. Mrs. ஞான சிரோன்மணி – சமயநல்லூர்
2. J. மாலதி ஜெயசெல்வம் – சீர்காழி
3. T. ஆனிஸ் பிரிடாரோஸ் – சென்னை
4. Mrs. தெல்மா ஸ்டான்லி –மதுரை
5. Mrs. ரூபவதி நோபிள் – நெல்லை
6. Mrs. ரேச்சல் தமிழரசி – மதுரை
7. Mrs. ஷீலா ரிச்சர்ட்தாஸ் – சென்னை
8. S. சூசை மரியன் – சென்னை
9. J. செல்வி ஜெயராஜ் – நாமக்கல்
10. G.புஸ்பா ஜேம்ஸ் – விருதுநகர்
11. S. சந்திரமணி – திருப்பத்தூர்
12. D. குளோரி திலகவதி – ஈரோடு
13. Mrs. சந்திரா பீட்டர் – திருச்சி
14. S. டேவிட் சாந்தகுமார் – வல்லம்
15. Mrs.ஹெப்ஸி தாமஸ் – படப்பை
16. Mrs.சுகந்தி ஜோன்ஸ் – திருச்சி
17. G. பீற்றர் பால்ராஜ் – தூத்துக்குடி
18. Mrs.சாந்தி ஜோயல் – திருச்சி
19. Mrs. ரூபி ஜெபராஜ் – மதுரை
20. D. மோசஸ் – தஞ்சாவூர்
21. I.அலெக்சாண்டர் சாலமோன் – சிவகங்கை
22. Mrs.மேரி சாராள் – சமயநல்லூர்
23. B. ஜாய்ஸ் ஜோசுவா – வெள்ளறம்
24. Mrs. ஆலிவ் தேவதாஸ் – சென்னை
25. Sis. லில்லி புஸ்பம் – தூத்துக்குடி
26. Mrs. S. செல்வி ஜான்ரோஸ் – நாகர்கோவில்
27. T. புளோரா எழில் – ஆம்பூர்
28. Mrs. மேரி ராஜ் – மதுரை
29. Mrs.காந்தா மனோகரன் – திருச்சி
30. Mrs.பிரேமலதா சுந்தர்பாபு – செங்கல்பட்டு
31. Mrs. ராஜம்மாள் – திருப்பூர்
32. Mrs. சாந்தி வில்லியம் – புதுக்கோட்டை
33. Mrs. டெய்ஸி தர்மராஜ் – புதுக்கோட்டை
34. Mrs. ஹெலன் திலக் – மதுரை
35. தெபோராள் ஸ்டீபன் – சேலம்
36. Dr.D.S. ஜெபநேசன் – திண்டுக்கல்
37. Mrs.D.I. அன்பு சுதந்திரம் – ஏர்வாடி
38. C. பூபதி லாரன்ஸ் – கோவை
39. ச. ஜீவா செல்வராணி – திருச்சி
40. R. அனிதா மார்கிரேட் – குன்னூர்
41. R. ஷீலா ரவி – குன்னூர்
42. M. தேவசகாயம் ரவி – குன்னூர்
43. சாந்தி ஜோயல் – திருச்சி
44. A. ரோஸ் மேரி – சென்னை
45. Mrs. லில்லி ஆல்பர்ட் – நெல்லை
46. Mrs. இந்திரா பாண்டி – திருமங்கலம்
47. P. சூரியபிரியா – திருமங்கலம்
48. P. சௌந்தர பாண்டி – திருமங்கலம்
49. G. ஏஞ்சலம்மாள்– வளர்நகர்
50. J. விஜய்– வளர்நகர்
51. R. பியூலா ரமேஷ் – வளர்நகர்

தொடர்ந்து இப்பகுதியில் பங்குபெறும் அனைவருக்கும் வாழ்த்துக்கள் !

# சென்ற மாத ஊழியங்கள்









நாகர்கோவிலில் நமது தபால்வழி வேதாகம பாடங்களை படித்து முடித்தவர் மத்தியில் நமது ஆசிரியர் அவர்கள் தேவசெய்தி கொடுத்தார், அவர்களுக்கு சான்றிதழும், வேதாகமும் பரிசாக வழங்கப்பட்டது




ஆந்திராவில் நடைபெற்ற பார்வையற்றோர் வேதாகம முகாம்



மாதந்தோறும் பார்வையற்றோருக்கு அரிசி வழங்கப்படுகிறது



திருமுழுக்கு பெற்ற பார்வையற்ற சகோதரன்



பகுதி வாரியாக சிறுவர் வகுப்புகள் நடத்தப்பட்டு பரிசுகள் கொடுக்கப்படுகின்றன

Owned, Published & Edited by P.C. PHILEMON RAJAH
Printed at Thee Classic Printers Madurai-1 Phone 2323819
Registered News Paper No. : TNTAM/2011/42166
Postal Registration No. : TN/MA/67/2015-2017
Posted at Arasaradi HPO on 10th, 11th December 2016

## கிருபையுள்ள வார்த்தை வெளியிட்டுள்ள சிறப்பு புத்தகங்கள்











அன்பார்ந்த வாசகர்களே! இந்த அனைத்து புத்தகங்களையும் உங்கள் ஆத்மீக வளர்ச்சிக்கு பயன்படுத்திக்கொள்ளும்படி வேண்டுகிறோம். ரூபாய் 100/–மட்டும் அனுப்பி இப்புத்தக தொகுப்பை பெற்றுக்கொள்ளுங்கள்!

## தபால் வழி பைபிள் பாடங்கள்








அடிப்படை (Basic) மற்றும் முதுநிலை (Advanced) பைபிள் பாடங்களை தபால் வழியில் படித்து, அழகிய சான்றிதழும் (Certificate) முழு பைபிளையும் பரிசாக பெறுங்கள்!

## கைபிரதிகள்







உங்கள் சுவிஷேச ஊழியத்திற்கு கைபிரதிகள் பல்வேறு தலைப்புகளில் பாதி விலையில் கிடைக்கும். விபரங்களுக்கு

**92 4421 4421, 92 4431 4431**

If undelivered please return to :

**EDITOR**
**KIRUBAIYULLA VAARTHAI**

45 C/1, Church Lane,
Coronation Street, Arasaradi,
Madurai - 625 016. India
E-mail : obey2jesus@gmail.com
Cell : 92 4421 4421, 92 4431 4431

To